நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 363/2025**

**P.W. 6 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜா |
| தந்தை / கணவர் பெயர் | : | கோவிந்தன் |
| கிராமம் | : | பி.என்.பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 6** |
| வயது | : | 52 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 09–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.18PM)

1. நான் தற்போது மேட்டூர் நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். 02.04.2024 ம் தேதி கொளத்தூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த சித்தன் என்பவரது விபத்து இண்டிமேசன் பேரில் பெண் தலைமைக்காவலர் 1630 திருமதி கிருஷ்ணவேணி என்பவர் மேட்டூர் அரசு

மருத்துவமனைச் சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சித்தன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து என்னிடம் ஆஜர் படுத்தியதின் பேரில் கொளத்தூர் காவல் நிலைய குற்ற எண் 119/2024 சட்டப்பிரிவு 279, 337 இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அ றிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகாருடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டுர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 02.04.2024 ம் தேதி மதியம் 01.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஈஸ்வரன், சிங்கமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். ( **மாதிரி வரைபடம் அ..சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. சாட்சிகள் கந்தசாமி, வெண்ணிலா, பிரியங்கா, சிங்கமுத்து, ஈஸ்வரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த இந்த வழக்கில் காயம் அடைந்த சித்தன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி லோகநாயகி என்பவரை 25.04.2024 ம் தேதி 14.00 மணிக்கு சித்திரப்பட்டி புதூர் நால்ரோடு அருகே இருந்தவரை கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து அவருது உறவினர் தமிழ்செல்வன் என்பவருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

4. பின்பு எதிரியை 14.30 மணிக்கு நிலையம் அழைத்து வந்து தக்க பிணையின் பேரில் விடுவித்தேன். இந்த வழக்கில் விபத்தை ஏற்படுத்திய TN 36 AP 3242 ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தை விபத்திற்கான காரணம் அறியும் பொருட்டு மேட்டுர் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இத்துடன் என்னுடைய முதல் கட்ட விசாணையை முடித்து மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.35PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**